செய்தி துணைப்பாடப்பகுதியினை சுருக்கி எழுதுக.

முன்னுரை:

தஞ்சாவூர் தமிழுக்கு அளித்த கொடை தி. ஜானகிராமன். இவர் தஞ்சை மண்வாசனையுடன் 'சிவப்பு ரிக்ஷா' என்ற தொகுப்பில் செய்தி என்னும் சிறுகதையைப் படைத்துள்ளார். மிக உயர்ந்த இசை சிறந்த கலைஞனால் கையாளப்படும் போது சொற்களின் எல்லையைத் தாண்டி இசையின் மூலமாகவே பொருள் கொடுக்கிறது என்பதை இக்கதை உணர்த்துகிறது.

வக்கீல் வீட்டில்:

'இசைக்கு மயங்காத உயிர்களே இல்லை'

இசையை விரும்புபவரான வக்கீல் ஒருவர் தனது வீட்டில் ஒரு இசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்கிறார். அந்த நிகழ்ச்சியை நிகழ்த்த அவ்வூரில் புகழ்பெற்ற நாகசுர வித்வான் அவரது மகன் தங்கவேலுவுடன் குழுவினரை அழைத்துக் கொண்டு வருகிறார். இசை நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக வெளிநாட்டு இசைக்கலைஞர் பிலிப்போல்ஸ்கா அவரது குழுவினருடன் வந்திருந்தார். வக்கீல் நாகசுர வித்வானைப் போல்ஸ்காவிற்கு அறிமுகம் செய்து வைத்தார்.

இசை நிகழ்ச்சியின் தொடக்கம்:

நாகசுர வித்வான் தனது குழுவினருடன் மேடையில் ஏறி அமர்ந்து கொண்டார். நாகசுரத்தின் மேல் பகுதியில் உள்ள சீவாளியை சரிசெய்து கொண்டு வாசிக்கத் தொடங்கினார். வித்வான் 'நாட்டை' எனும் ராகத்தைக் கம்பீரமாக ஓர் ஆலாபனம் செய்து கீர்த்தனையைத் தொடங்கினார். போல்ஸ்காவின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. அவர் தன்னிலை இழந்து இசையை ரசித்தார்.

போல்ஸ்காவின் மகிழ்ச்சி:

நாகசுர வித்வான் சாமா ராகத்தை வாசிக்கத் தொடங்கினார். எல்லோரும் தங்களை மறந்தனர். போல்ஸ்கா கைகளை ஏந்திக் கொண்டு நடந்து வந்து மேடை முன் முழந்தாளிட்டு அமர்ந்து கொண்டார். நாகசுர வித்வான் சாந்தமுலேகா ராகத்தை வாசிக்கத் தொடங்கினார். இசை மழையில் நனைந்து கொண்டிருந்த போல்ஸ்கா நாகசுர வித்வானிடம் ‘சாந்தமுலேகா’ இராகத்தையே வாசிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இசை தரும் செய்தி:

உலகம் முழுவதும் பிணக்கிடங்காக காட்சி அளிக்கிறது. ஒரே கூச்சல், ஒரே அடிதடி. இந்தப் போர்க்களத்தில் இந்த இரைச்சலில் நான் மட்டும் அமைதி காண்கிறேன். ஓர் அமைதி என் உள்ளத்தில் எழுகிறது. இனிமேல் இரைச்சலும் சத்தமும் யுத்தமும் என்னைத் தொடாது. நாதத்திற்குச் சொல்லவா வேண்டும்? எந்த வரம்பையும் கடந்து செய்தியை அது கொடுத்துவிடும். ஆம்! இந்த இசை அமைதியைத் தருகிறது.

முடிவுரை:

இசை மொழியைக் கடந்தது. அமைதியின் நாக்காக அது எல்லா மொழிகளையும் பேசுவது. மனங்களைக் கரைத்து அந்தரவெளியில் உலவச் செய்வது. ஆரவாரங்கள், குழப்பங்கள், கூச்சங்கள், துயரங்கள் என எல்லாவற்றையும் கடந்து அமைதி வழியில் மனங்களைக் கூட்டுவது. இசை இனம், நாடு என்ற எல்லைக் கோடுகளைத் தாண்ட வைக்கும் .